

முதல்வர் கோப்பை குத்துச்சண்டை போட்டி

ஒருதலைப்பட்சமாக நடுவர்கள் செயல்படுவதாக குற்றச்சாட்டு

■ திருப்பூர்

சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், நீலகிரி மற்றும் கோவை உள்ளிட்ட 6 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளும் முதல்வர் கோப்பைக்கான மண்டல அளவிலான குத்துச் சண்டை போட்டிகள் திருப்பூரில் உள்ள தனியார் கல்லூரியில் நடந்து வருகின்றன.

இந்நிலையில், போட்டியில் கலந்துகொண்ட வெளி மாவட்ட வீரர், வீராங்கனைகளுக்கு நியாயமான முறையில் தீர்ப்புகள் வழங்கப்படாமல், ஒரு சிலருக்கு ஆதரவாக நடுவர்கள் ஒருதலைப்பட்சமாக செயல்படுவதாக புகார் எழுந்துள்ளது. இது குறித்து நடுவர்களிடமும், நிர்வாகத்தினரிடமும் முறையிட்டபோது, பெற்றோர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் முறையான மதிப்பளிக்காமல் அவமரியாதை செய்வதாகவும் குற்றம்சாட்டுகின்றனர்.

மேலும், குத்துச்சண்டை வீரர்களுக்கு போதிய ஓய்வு நேரம் வழங்கப்படாமல், விடிய விடிய அடுத்த நாள் காலை வரை தொடர்ந்து 24 மணி நேரமும் போட்டிகளை நடத்திய தாகவும் கூறப்படுகிறது. இதனால் சில வீரர்களுக்கு உடல் நலக்குறைவும் ஏற்பட்டுள்ளது.

அரசு நடத்தும் முக்கியத்துவம் வாய்ந்த இப்போட்டியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் போன்ற உயர் அரசு அதிகாரிகள் யாரும் நேரடியாகக் கண்காணிக்க வரவில்லை என்றும், போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தன்னிச்சையாகச் செயல்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே, விளையாட்டு மேம்பாட்டுத்துறை அதிகாரிகள் தலையிட்டு, திறமையான வீரர்களுக்கு உரிய வாய்ப்பும், நியாயமான தீர்ப்பும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், பயிற்சியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விளைச்சல் குறைந்ததால் உடுமலையில் தக்காளி விலை உயர்வு

■ உடுமலை

உடுமலை மற்றும் மடத்துக்குளம் சுற்றுவட்டார பகுதிகளில் தக்காளி விளைச்சல் குறைந்துள்ளதால், சந்தையில் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.

திருப்பூர் மாவட்டம் உடுமலை, மடத்துக்குளம் மற்றும் அதன் சுற்றியுள்ள கிராமங்களில் ஆண்டுதோறும் சுமார் 5,000 முதல் 10,000 ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுவது வழக்கம். ஆனால், கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நிலவும் வறட்சி, பருவமழை பொய்த்தமை, தட்பவெப்ப நிலை மாற்றம் மற்றும் போதிய நீரின்மை ஆகியவற்றால் தக்காளி செடிகள் காய்ந்தும், நோய் தாக்குதலுக்கு உள்ளாகி விணாகி வருகின்றன.

மேலும், சில புதிய வீரியரக விதைகள் தோல்வியடைந்ததால் தொடர்நஷ்டத்தை சந்தித்த விவசாயிகள், தக்காளி பயிரிடுவதை கணிசமாகக் குறைத்துவிட்டனர். விளைச்சல் முற்றிலுமாக பாதிக்கப்பட்டதால் காய்கறி சந்தைகளுக்கு தக்காளிவரத்து வெகுவாக குறைந்துள்ளது.

> வரும் நாட்களிலும் சந்தைக்கு தக்காளி வரத்து மேலும் குறையும் பட்சத்தில், விலை உச்சத்தைத் தொடும் என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "கடந்த 20 நாட்களுக்கு முன்பு 14 கிலோ எடை கொண்ட பெட்டி ரூ.200-க்கு விற்பனையான நிலையில், தற்போது ஒரு பெட்டி தக்காளி ரூ.400 வரை உயர்ந்துள்ளது. சந்தையில் இதன் விலை இருமடங்கு உயர்ந்துள்ள போதிலும், தோட்டத்தில் பறிப்பதற்குப் பழங்கள் இல்லாததால், இந்த விலையேற்றம் விவசாயிகளுக்கோ, உள்ளூர் வியாபாரிகளுக்கோ எவ்வித லாபமும் கிடைப்பது இல்லை" என்றனர்.

உள்ளூர் சந்தைகளில் தக்காளி வரத்து இல்லாததால், வியாபாரிகள் கொள்முதலுக்காக ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களை நாடத் தொடங்கியுள்ளனர். வரும் நாட்களிலும் சந்தைக்கு தக்காளி வரத்து மேலும் குறையும் பட்சத்தில், விலை உச்சத்தைத் தொடும் என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

▲ உலக இதய தினத்தை முன்னிட்டு கோவை அரசு மருத்துவமனை வளாகத்தில் நடந்த விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள்.

டெங்கு கொசுப்புழு இருப்பது கண்டறியப்பட்டால் அபராதம்

▸ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை

■ திருப்பூர்

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது கனமழை பெய்துவருகிறது. மழைக் காலம் தொடங்கியுள்ளதால் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் டெங்கு பாதிப்பு அதிகமாக இருக்கும். மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் பாதிப்புகளை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வீடுகள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகத்தில் உள்ள புல் மற்றும் புதர்களை அகற்ற வேண்டும். மேலும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது.

தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை நன்றாக கழுவி நீர் பிடித்தபின் காற்று புகாதவாறு மூடி வைக்க வேண்டும். வீட்டினை சுற்றி உள்ள இடங்கள் மற்றும் வீட்டின் மொட்டை மாடியில் கிடக்கும் தேவையற்ற பொருட்களான பழைய டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் சிரட்டைகள், உடைந்த பூந்தொட்டிகள் போன்றவற்றில் கொசு புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்பு உள்ளது.

வணிக நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு பகுதியில் கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆய்வு செய்ய வரும் போது பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். டெங்கு கொசுப்புழு இருப்பது கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும். அவிநாசியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் கொசு புழு உற்பத்தியாகும் வகையில் சுகாதாரம் இன்றி இருந்ததால் ரூ.2 ஆயிரம் அபராதம் விதிக்கப்படவுள்ளது. இதுவரை 495 பொது சுகாதார நோட்டீஸ் வழங்கப்பட்டு ரூ.12,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தொழிலாளி கொலை வழக்கில் 6 பேருக்கு ஆயுள் தண்டனை

■ திருப்பூர்

திருப்பூர் பட்டுக்கோட்டையார் நகர் பகுதியை சேர்ந்தவர் அருண்குமார் (23), பின்னலாடை நிறுவன டெய்லர். கடந்த 2020-ம் ஆண்டு ஜனவரி 17-ம் தேதி இரவு அருண்குமார் வெள்ளியங்காடு மரகதம்மாள் லே அவுட் காட்டுப்பகுதியில் வெட்டுகாயங்களுடன் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற திருப்பூர் தெற்கு போலீஸார் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

அருண்குமாரின் நண்பரான டி.எம்.சி.காலனியை சேர்ந்தவர் பிரேம்குமார் (29). இவரது தந்தை முனியப்பனுக்கும் (53) அருண்குமாருக்கும் இடையே பிரச்சினை இருந்து வந்தது. இதன் காரணமாக பிரேம்குமார், அவரது தந்தை முனியப்பன் (53) மற்றும் நண்பர்களான டி.எம்.சி. காலனியை சேர்ந்த பழனி (30), சந்தைப்பேட்டை அம்பேத்கர் காலனியை சேர்ந்த கஜேந்திரன் (46), வெள்ளியங்காட்டை சேர்ந்த மதன்குமார் (25), டி.எம்.சி. காலனியை சேர்ந்த ராமசந்திரன் (42) ஆகிய 6 பேரும் சேர்ந்து அருண்குமாரை கொலை செய்தது தெரிய வந்தது. கொலை வழக்குப்பதிவு செய்த போலீஸார் 6 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை திருப்பூர் 2-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கின் விசாரணை நிறைவடைந்து நீதிபதி நேற்று தீர்ப்பு வழங்கினார். இதில், குற்றம் சாட்டப்பட்ட 6 பேருக்கும் ஆயுள் தண்டனையும், தலா ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

தங்கம் பவுனுக்கு ரூ.2,680 சரிவு

■ சென்னை

தங்கத்தின் விலை நேற்று ஒரேநாளில் பவுனுக்கு ரூ.2,680 குறைந்து, ரூ.1 லட்சத்து 9 ஆயிரத்து 320-க்கு விற்பனை செய்யப்பட்டது. இம்மாத தொடக்கம் முதல் தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்தது. கடந்த 20-ம் தேதி முதல் தங்கம் விலை படிப்படியாக குறைந்து வந்தது. இடையில் ஒருநாள் தவிர, மற்ற நாட்கள் கணிசமாக குறைந்துவந்தது.

இந்நிலையில், சென்னையில் தங்கத்தின் விலை நேற்று ஒரேநாளில் பவுனுக்கு ரூ.2,680 குறைந்து, ரூ.1 லட்சத்து 9 ஆயிரத்து 320-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.335 குறைந்து, ரூ.13 ஆயிரத்து 665-க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த 7 நாட்களில் மட்டும் பவுனுக்கு ரூ.4,960 வரை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெள்ளி கிராமுக்கு ரூ.5 குறைந்து, ரூ.250 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.5 ஆயிரம் குறைந்து, ரூ.2 லட்சத்து 50 ஆயிரமாக இருந்தது.

இதுகுறித்து, சென்னை தங்கம் மற்றும் வைர நகை வியாபாரிகள் சங்க பொதுச்செயலாளர் எஸ். சாந்தகுமார் கூறும்போது, "அமெரிக்க கடன் பத்திரங்களின் வட்டி விகிதம் 10 ஆண்டுகளில் இல்லாத அளவு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், மக்கள் கடன் பத்திரங்களில் கவனம் செலுத்துகின்றனர். தங்கத்தில் முதலீடு செய்வதை குறைத்துள்ளனர். இதன் தாக்கத்தால் தங்கம் விலை குறைந்துள்ளது. ஒருவார காலத்துக்கு விலை இறங்குமுகமாக இருக்க வாய்ப்பு உள்ளது" என்றார்.

காலநிலை கல்வி முன்னெடுப்பு திட்டத்தின் கீழ்

உண்டு உறைவிடப்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி

■ திருப்பூர்

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் காலநிலைக் கல்வி முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி முகாம் செப்டம்பர் 28 முதல் 30-ம் தேதி வரை 3 நாட்கள் மறையூரில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமிற்கு ஆசிரியர்களை அழைத்து செல்லும் வாகனத்தை மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

▲ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆசிரியர்களுக்கான உண்டு உறைவிடப்பயிற்சி முகாமிற்கு செல்லும் வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே.

இதுகுறித்து அவர் பேசியதாவது: ஆசிரியர்களுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி முகாமில் காலநிலை மாற்றம், அதன் காரணங்கள் மற்றும் தாக்கங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர்ப் பாதுகாப்பு, இயற்கை வளங்களை பேணுதல் மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை குறைப்பதற்கான நடைமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 140 ஆசிரியர்கள் பங்கேற்க உள்ளனர்.

பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை காலநிலை விழிப்புணர்வு தூதுவர்களாக உருவாக்கி, அவர்கள் வாயிலாக மாணவர்களிடையே காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் புனிதா அந்தோணியம்மாள், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) காளிமுத்து உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

▲ உலக வெறிநோய் தினத்தை முன்னிட்டு கோவை மாநகராட்சி சார்பில் நடைபெற்ற வெறிநாய்கடி தடுப்பூசி முகாம் மத்திய மண்டலம் வார்டு 56-க்குட்பட்ட ரேஸ்கோர்ஸ் பகுதியில் நடைபெற்றது. முகாமை தொடங்கிவைத்து பார்வையிட்ட கோவை ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்டோர். படம்: ஜெ.மனோகரன்

புகையிலைப் பொருட்கள் கடத்தி சிக்கிய இருவர் தப்ப முயன்ற போது கை முறிந்தது

■ கோவை

கோவை மாவட்டம் கோவில்பாளையம் போலீஸார் நேற்று முன்தினம், கோவில்பாளையம் பகுதியில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது, காரில் இருந்தவர்கள் காரை இயக்கி ஓட்டிச் சென்றனர். சுதாரித்துக் கொண்ட காவலர் வேல்முருகன் சட்டென்று குதித்து காரின் மீது ஏறி, அவர்களை நிறுத்த முயன்றார்.

அவிநாசி அருகே, நெரிசலில் சிக்கிய கார் நின்றதும் அதிலிருந்து இறங்கிய மூவர் தப்பியோட முயன்றனர். போலீஸார் அவர்களைப் பிடித்து விசாரித்த போது, பிடிபட்டவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சுரேஷ் (20), ராஜேஷ் (23), பாபாதரம் (27) எனவும், இவர்கள் 170 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை கடத்திச் சென்றதும் தெரியவந்தது. இதையடுத்து போலீஸார் மூவரையும் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இதற்கிடையே, கைது செய்யப்பட்ட மூவரையும் விசாரணைக்காக நீலாம்பூர் அருகே நேற்று போலீஸார் அழைத்துச் சென்றனர். அப்போது, சுரேஷ், ராஜேஷ் ஆகியோர் போலீஸாரிடம் இருந்து தப்பி ஓட முயன்றனர். அதில், கீழே விழுந்ததில் இருவரின் வலது கை முறிந்தது. தொடர்ந்து இருவரையும் போலீஸார் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

கஞ்சா, போதை மாத்திரைகள் விற்ற இருவர் கைது

■ கோவை

கோவை சூலூர் காவல் எல்லைக்குட்பட்ட சிந்தாமணிபுதூரில் ஒரு கும்பல் இளைஞர்கள், தொழிலாளர்களை குறி வைத்து கஞ்சா, போதை மாத்திரைகள் விற்பனை செய்வதாக சூலூர் போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில், சூலூர் போலீஸார் நேற்று சிந்தாமணிப்புதூர் பகுதியில் வாகனத் தணிக்கை மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக நடந்து வந்த இரு இளைஞர்கள் போலீஸாரைப் பார்த்ததும் தப்பிச் செல்ல முயன்றனர். சந்தேகத்தின் பேரில், போலீஸார் அவர்களைப் பிடித்து விசாரித்த போது, கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்வது தெரிந்தது. விசாரணையில் கோவை சவுரிபாளையத்தைச் சேர்ந்த ஸ்ரீ விஷ்ணு பிரபு (19), மணிகண்டன் (29) ஆகியோர் எனத் தெரிந்தது. இருவரையும் போலீஸார் கைது செய்தனர். இவர்களிடம் இருந்து 2 கிலோ கஞ்சா, 1,200 எண்ணிக்கையிலான போதை மாத்திரைகள் ஆகியவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

படிவம் G -க்கான இணைப்பு

(IBBI (திவாலானவர்களுக்கான நிலைத்தீர்வுத் திவால் செயல்முறை) ஒழுங்குமுறைகள், 2016-இன் ஒழுங்குமுறை 36A-இன் கீழ்)

ஜெய்சுபா அக்ரோ ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

(U15400TZ2020PTC034151)

பால் சார்ந்த தயாரிப்புகளை பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளது

[illegible]

தொடர்புடைய விபரங்கள்		
10.	[illegible]	06.10.2026
11.	[illegible]	11.10.2026
12.	[illegible]	16.10.2026
13.	[illegible]	18.10.2026
14.	[illegible]	18.10.2026
15.	[illegible]	17.11.2026

[illegible]

இடம்: சென்னை
நாள்: 29.09.2026

S ராஜேந்திரன், திவால் நிபுணர்
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N00396/2017-18/10241
[illegible] 31.12.2026 [illegible]
[illegible] 71/1, Mc [illegible] சென்னை - 600 031
மின்னஞ்சல் ID: [illegible]@gmail.com

கனரா வங்கி Canara Bank

Syndicate

கடன் வசூல் மேலாண்மைக் கிளை : குஜராத்தி சமாஜ கட்டிடம், எண்.661-1, மேட்டுப்பாளையம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 641 002. போன் எண்.0422 2555655, 2549459, 2558482. மின்னஞ்சல் : cb4712@canarabank.com

சுவாதீன அறிவிப்பு

[பிரிவு 13(4)] (அசையாச் சொத்திற்காக)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட கனரா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் மேற்படி சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 பிரிவு 13(2) விதி 3ன் படி, 11.06.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிட்ட கடன் தொகையான ரூ.1,47,54,796.16 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறு மற்றும் பைசா பதினாறு மட்டும்) மற்றும் வட்டி, பிற செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்/சொத்தின் உரிமையாளர் :** திரு. வில்சன் P தாமஸ், த/பெ. தாமஸ், கதவு எண்.F1, அக்‌ஷயா கார்டன், ஜெயநகர் 3வது குறுக்கு, கோயம்புத்தூர் – 641 041 என்பவருக்கு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்/சொத்தின் உரிமையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் குறிப்பாக கடன்தாரருக்கும்/உத்தரவாதமளித்தவருக்கும்/சொத்தின் உரிமையாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 24.09.2026 தேதியில் கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடைமையாக்கியுள்ளார்/உடைமையாக்க காரணமாக அமைந்தது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் கீழ் கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இதுமுதற்கொண்டு கடன்தாரரோ/உத்தரவாதமளித்தவரோ/சொத்தின் உரிமையாளரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்தச் சொத்துக்களில் எந்தவித பரிவர்த்தனையும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கோயம்புத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கனரா வங்கி-க்கு** வந்து சேரவேண்டிய கடன் தொகை ரூ.1,52,50,446.16 (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்திரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மற்றும் பைசா பதினாறு மட்டும்) 21.09.2026 தேதி வரை மற்றும் 22.09.2026 தேதியிலிருந்து பல்வேறு கடன்வசதிகளுடன் மற்றும் வட்டி, பிற செலவுகள் சேர்த்து வசூலிக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

அசையாச் சொத்தின் விபரம்

சொத்தின் ஆவண உரிமையாளர் பெயர் : திரு. வில்சன் P தாமஸ் : சொத்தின் அட்டவணைகள் : நீலகிரி பதிவு மாவட்டம், கூடலூர் சார் பதிவு மாவட்டம், கூடலூர் தாலுகா, கூடலூர் நகராட்சி, கூடலூர் 2 கிராமத்தில் பட்டா எண் 582ன் கீழ் புதிய சுஊ எண் 1083/1ல் மொத்தம் 0.08.0 எக்டர் (அல்லது 0.20 ஏக்கர் 20 சென்ட்) நிலத்துடன் அதில் கதவு எண்.10/400, 10/401 மற்றும் 10/402 கட்டப்பெற்ற சேர்ந்த வீட்டுமனைச் செல்ல பொதுச் நடைவழி உரிமைகளுடன் உள்ளது. இந்நிலம் T.N.P.P.F சட்டத்தின் கீழ் வராது. அட்டவணைச் சொத்து அஞ்சராம் சாலை வீதியில் உள்ளது. **இதன் எல்லைகள் :** வடக்கே : M. மோனிகாவுக்குச் சொந்தமான சொத்து, தெற்கே : கல்யாணிக்குச் சொந்தமான சொத்து, கிழக்கே : கல்யாணிக்குச் சொந்தமான சொத்து, மேற்கே : பார்வதிக்குச் சொந்தமான சொத்து. இதன் சொத்து பழைய வரி விதிப்பு எண்கள் 066/15007, 066/15008, 066/2928, 066/2929 புதிய சொத்து வரி விதிப்பு எண்கள் 066/009/901384, 066/009/901385, 66/009/900330, 066/009/900331 மின் இணைப்பு எண்கள் 03-408-005-893, 03-408-005-254, 03-408-005-2214, 03-408-005-893 ஆகியன சேர்ந்த சொத்து கூடலூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 24.09.2026

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண் 27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095. **கிளை அலுவலகம்:** சக்ரவர்த்தி டவர், எண்.1789 A, திருச்சி ரோடு, ஒலிம்பஸ், ராமசாமி நகர், ராமநாதபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641045

இ-ஏல விற்பனை அறிவிப்பு

அடமானச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் அடமானச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன் கீழ் உஜ்ஜீவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி [illegible]

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	22.09.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டெபாசிட் தொகை (EMD)
118680300000012 / 1.Mr.சுகுமார் கோபால் 2.Mr.பிரேமா சுகுமார்	(i) 08.06.2021 & 07.06.2021 அன்றுள்ளபடி ₹ 8,15,971/- (ரூபாய் எட்டு லட்சத்து பதினைந்தாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.12.2021 & நேரடி சுவாதீனம் - 04.07.2026	₹ 14,99,705.53 (ரூபாய் பதினான்கு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுநூற்று ஐந்து மற்றும் பைசா ஐம்பத்து மூன்று மட்டும்)	₹ 10,62,000/- (ரூபாய் பத்து லட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்)	₹ 1,06,200/- ரூபாய் ஒரு லட்சத்து ஆறாயிரத்து இருநூறு மட்டும்

சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் மற்றும் சூலூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட S.F.எண்.177/1 நத்தம் (பட்டா எண்.412), இட்டிகட்டி கிராமம் என்னும் முகவரியிலுள்ள மனை. எல்லைகள் மற்றும் அளவுகள்: ஐட்டம் எண்.1: [illegible] SC எண்.182.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 04.11.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 03.11.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	02.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். இ-ஏலமானது உஜ்ஜீவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.4Closure மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr. வருண் கௌடா (Mob. No.81420 00809)) [illegible] Bankauctions.in or https://www.ujjivansfb.in/e-auctions [illegible] https://www.bankauctions.in [illegible] foreclosure/Bank auction, Helpline Number's- 9515160061/64 support email id: -karnataka@bankauctions.in/info@bankauctions.in Auction portal - https://www.bankauctions.in

[illegible]

i.e. https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 29.09.2026

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜீவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்